# தமிழ் வளர்ச்சிக்கான நூல் வெளியிட நிதியுதவித் திட்டம்

## விண்ணப்பம்

| | | |
|---|---|---|
| 1. | நூலாசிரியர் / மரபுரிமையர் / மறுபதிப்புச் செய்வோர் பெயர் / முகவரி | : |
| 2. | பிறந்த நாள் / அகவை (சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்) | : |
| 3. | நூலை வெளியிடுபவர் முகவரி (மறுபதிப்பு நூலாயின்) | : |
| 4. | தொலைபேசி எண் | : |
| 5. | நூலின் பெயர் | : |
| 6. | நூலின் கருப்பொருள் | : |
| 7. | பணியாற்றும் விவரம் | : |
| 8. | வருமானச் சான்று இணைக்கப்பட்டுள்ளதா ? | : |
| 9. | மரபுரிமையராயின் வட்டாட்சியர் சான்று இணைக்கப்பட்டுள்ளதா ? | : |
| 10. | மறுபதிப்பாயின் பதிப்புரிமைச் சான்று இணைக்கப்பட்டுள்ளதா ? | : |
| 11. | மறுபதிப்பு நூலாயின் ஏற்கெனவே வெளிவந்த ஆண்டு | : |
| 12. | பதிப்புரிமை பெறப்பட்டுள்ளதா ? | : |
| 13. | மொழி பெயர்ப்பு எனில் மூலநூலின் மொழி | : |
| 14. | மொழி பெயர்த்துள்ள மொழி | : |
| 15. | மொழிபெயர்ப்பாளர் பெயரும், முகவரியும் | : |

16. அச்சகப் பெயரும் முகவரியும் :

17. பிற வழிகளில் பெற்றுக்கொண்ட / பெறக்கூடிய நிதியுதவிக்கான விவரங்கள் :

18. அச்சிட்டு வெளியிடுவதற்காகும் அச்சக மதிப்பீட்டுச் செலவு (படிவம்) நிறைவு செய்து இணைக்கப்பட வேண்டும் :

19. அரசிடமிருந்து பெற விரும்பும் நிதியுதவித் தொகை :

20. இந்நூல் வெளிவருவதால் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பயன்படும் விவரம் (தேவைப்படின் தனித்தாளில் எழுதி இணைக்கலாம்). :

விண்ணப்பதரார்

ஒப்பம்

நாள்

## உறுதி மொழி

இத்திட்டம் தொடர்பாக அரசால் குறிப்பிடப் பெற்ற விதிகளைப் படித்துப் பார்த்து அவற்றைப் புரிந்து கொண்டேன் என்றும், அவ்விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் என் விண்ணப்பத்தில் அளிக்கப்பெற்றுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இதன் மூலம் உறுதிகூறுகிறேன்.

விண்ணப்பதரார் ஒப்பம்

# தமிழ் வளர்ச்சித் துறை

## தமிழ் வளர்ச்சிக்கான நூல் வெளியிட நிதியுதவித் திட்டம்
## நூல் அச்சிடல் செலவு – தோராய மதிப்பீடு விவரப் படிவம்

1. நூலின் பெயர் :
2. நூலாசிரியர் பெயர், முகவரி தொலைபேசி எண்
3. அச்சகத்தின் பெயர், முகவரி, தொலைபேசி எண்
4. அச்சிடவுள்ள படிகளின் எண்ணிக்கை
5. நூலின் பக்கங்கள் எண்ணிக்கை
6. படிவங்களின் (FORMS) எண்ணிக்கை
7. நூலின் அளவு (SIZE OF THE BOOK)
8. [கீழே 8 முதல் 21 வரை அளிக்கப்படும் விவரங்கள் 1000 படிகளுக்கு உரியவையாக இருத்தல் வேண்டும்]
9. தாள் விலை
10. அட்டை விலை
11. மேலட்டை உறையின் விலை
12. மேலட்டையின் விலை
13. காப்புறைச் செலவு
14. கட்டமைப்புச் செலவு
15. பக்கத்தாள் விலை
16. அட்டைப்படம் படமெடுப்புச் செலவு
17. அட்டை / மேலட்டை உறை அச்சுச் செலவு
18. மொத்த அச்சுக் கோவைச் செலவு

19. மொத்தப் படத் தயாரிப்புச் செலவு

20. மொத்த அச்சுத் தகடு தயாரிப்புச் செலவு

21. மொத்த அச்சுச் செலவு ______________________

மொத்தம் ரூ. ______________________

______________________ எனும் நூலினை அச்சிடுவது தொடர்பில் மேற்குறிப்பிட்ட வகையில் தோராயமாக மொத்தம் ரூ.__________ /- செலவாகுமெனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நூலாசிரியர் ஒப்பம் :

நாள் :

அச்சகத்தார் ஒப்பம் :

நாள் :

முத்திரை :

# தமிழ் வளர்ச்சிக்கான நூல் வெளியிட நிதியுதவித் திட்டம்

## விதிமுறைகள்

விதி
எண்.

(அ) ஆண்டு வருவாய் ரூ.50,000/-க்கு மிகாமல் உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க தகுதியுடையவராவர் வட்ட ஆட்சியரிடமிருந்து வருவாய்ச்சான்று பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

ஆ) 60 அகவை நிரம்பிய நூலாசிரியரும், நூலாசிரியரது இறப்புக்குப் பின்னர் அவரது மரபுரிமையரும், பதிப்புரிமை பெற்று மறுபதிப்பு வெளியிடுவோரும், தமிழில் உள்ள நூல்களைப் பிறமொழிகளிலும், பிற மொழிகளில் உள்ள நூல்களைத் தமிழிலும் மொழிபெயர்த்து வெளியிடுவோரும், இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கலாம். அவ்வாறு விண்ணப்பிக்கையில் உரிய வட்டாட்சியரிடமிருந்து வருவாய்ச்சான்று பெற்று அளிப்பதிலிருந்து விலக்களிக்கப்பெறுகின்றனர்.

2. நிதியுதவி அளிப்பதற்குரிய நூல்கள் தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படும் வகையிலும் தமிழ்ப் பண்பாட்டைப் போற்றும் வகையிலும் இருத்தல் வேண்டும்.

3. இதுவரை வெளிவராத நூல்களுக்கும், ஏற்கெனவே வெளிவந்த அரிய நூல்களின் மறுபதிப்பிற்கும் மொழிபெயர்ப்பு நூல்களுக்கும் நிதியுதவி வழங்கப்பெறும்.

4. இதுவரையில் போதிய அளவிற்கோ, மனநிறைவளிக்கத் தக்க வகையிலோ எழுதப்பட்டிராத பொருண்மைகள் குறித்த நூல்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பெறும்.

5 விதி எண்.5

(அ) நூலாசிரியர்களுக்கும், மறுபதிப்பு எனில் பதிப்புரிமை பெற்று வெளியிடுபவருக்கும் நிதியுதவி வழங்கப்படும். மேலும் வணிகமுறை சாரா நிறுவனங்களிடமிருந்தும்/அமைப்புகளிடமிருந்தும் கிடைக்கப்பெறும் விண்ணப்பமும், நிதியுதவிக்குக் கருதப்பெறும். அத்தகைய நிறுவனங்கள்/அமைப்புகள் வெளியிடக் கருதும் நூலின் விற்பனையால் தனிப்பட்ட நூலாசிரியரோ அல்லது வேறு எவரோ பயன்பெறாமல் அந்நிறுவனமோ/அவ்வமைப்போ பயன்பெறத்தக்கவாறு வெளியிடக் கருதும் நூலின் உரிமையை அந்நிறுவனம்/அவ்வமைப்பு பெற்றிருக்க வேண்டும். இதற்குரிய சான்றை விண்ணப்பத்துடன் தவறாது இணைக்க வேண்டும்.

(ஆ) ஒரு நிதியாண்டில் ஒருவருக்கு ஒரு நூலுக்கு மட்டுமே நிதியுதவி வழங்கக் கருதப்படும். வணிக நோக்கு இல்லா நிறுவனம்/அமைப்பு எனில் நூலின் தனித்தன்மையைக் கருதியும், நிதிநிலையைக் கருத்திற்கொண்டும் நிதியுதவி வழங்குவதற்குரிய இவ்விதி தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களால் தளர்த்துவதற்குரியதாகும்.

6 நிதியுதவி வேண்டுவோர் இத்திட்டத்திற்குரிய விண்ணப்பத்தையும் அச்சக மதிப்பீட்டுப் படிவத்தையும் முழுமையாக நிறைவு செய்து, தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம், தமிழ்ச் சாலை, எழும்பூர், சென்னை–600 008 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். முழுமையாக நிறைவு செய்யப்படாமலும், அச்சக மதிப்பீட்டுப் படிவம் இணைக்கப்படாமலும் வரும் விண்ணப்பங்கள் கருதப்பட மாட்டா.

7 விண்ணப்பத்துடன் வெளியிட விரும்பும் நூலின் படிகள் (கையெழுத்துப்படி/ தட்டச்சுப்படி) இரண்டை அனுப்ப வேண்டும்

8 பொதுவாக ஒரு நூலுக்கு ஆயிரம் அச்சுப் படிகள் வெளியிடப்பெறும் எனும் முறையில் நிதியுதவி வழங்கக் கணக்கிடப்படும். மிகச் சிறப்பான நூல்களைப் பொறுத்து இவ்விதியைத் தளர்த்தலாம்.

9 அச்சிடப் பெறுகின்ற படிகளில் மொத்த எண்ணிக்கையில் இருபதில் ஒரு பகுதியினை நிதியுதவி பெறுபவர் அரசுக்கு அளிக்க வேண்டும்.

10. நிதியுதவி வேண்டி பெறப்படும் விண்ணப்பங்கள் அதற்கென அரசால் அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழுவால் ஆய்வு செய்யப்பட்டு தகுதியின் அடிப்படையில் நிதியுதவி வழங்கப்பெறும்.

11 நிதியுதவி வழங்குவதற்கென வல்லுநர் குழுவால் தகுதியுடையவையெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அந்நூலை அச்சிடுவதற்காகும் செலவினம் குறித்து நூலாசிரியரிடமிருந்து பெறப்பட்டுள்ள அச்சக மதிப்பீட்டின் அடிப்படையில் முதல் தவணைத் தொகை வழங்கப்பெறும் நாளிலிருந்து 180 நாட்களுக்குள் நூலை அச்சிட்டு அதில் 50 படிகளையும், அச்சுச் செலவு விவரங்களையும் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு அளிக்க வேண்டும். அவ்வாறு அளிக்கப்பெறவில்லையேல் நிதியுதவி ஆணை நீக்கப்பெறுவதுடன் அளிக்கப்பட்ட நாளிலிருந்து முதல் தவணைத் தொகை 11% வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியதாகும்.

12 வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட நூல்களுக்கு முதல் தவணைத் தொகையாக நூலாசிரியர் அளித்துள்ள அச்சக மதிப்பீட்டுத் தொகையில் 5இல் ஒரு பங்கு, அதாவது 20 விழுக்காடுத் தொகை (அல்லது) இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பெருமளவுத் தொகை ரூ.50,000/-த்தில் 5இல் ஒரு பங்கு அதாவது 20 விழுக்காடுத் தொகை, இதில் எது குறைவாக உள்ளதோ அத்தொகையே முதல் தவணைத் தொகையாக வழங்கப்பெறும். நூல்களை அச்சிட்டுப் பெறப்படும் மூலச் செலவுச் சீட்டுகள், அச்சக மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில், எழுதுபொருள் அச்சுத் துறையிலிருந்து இரண்டாவது தவணைக்கு குறிப்புரை பெற்று, பின் எஞ்சிய தொகை விதிகளின்படி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் பெற்று வழங்கப்பெறும்.

13 நூலாசிரியர்கள் நிதியுதவி பெற்று நூல்களை அச்சிடும்போது விண்ணப்பத்துடன் அனுப்பப்பெற்ற படிகளின் அடிப்படையிலேயே நூல்களை அச்சிடுதல் வேண்டும். ஏதேனும் மாற்றங்களை மேற்கொள்ள விரும்பினால் அது குறித்து முன்னதாகவே தெரிவித்து முன் அனுமதி பெற வேண்டும்.

14 நிதியுதவி பெற்று நூல்களை வெளியிடும்போது **"இந்நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் தமிழ் வளர்ச்சிக்கான நூல் வெளியிட நிதியுதவித் திட்டத்தில் உதவி பெற்று வெளியிடப்பெறுகிறது"** எனத் தவறாது குறிப்பிடல் வேண்டும். மொழி பெயர்ப்பு நூல்களாயின் இக்குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் தவறாமல் அச்சிடப்பெற வேண்டும்.

15 நிதியுதவி பெற்று வெளியிடப்பெறும் நூல்களில் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள சீர்திருத்திய எழுத்துக்களைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.

16 பிறமொழிகளில் அச்சிடப்பெறும் நூல்களில் அந்நூலின் பெயர் தமிழில் தவறாமல் அச்சிடப்பெறவேண்டும். வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்கத் தகுதியுடையவை என வல்லுநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிந்துரை செய்யப்படும் நூல்களுக்குப் பெருமளவு நிதியுதவித் தொகை ரூ.50,000/-அல்லது நூலாசிரியரால் அனுப்பப்பெற்று, தமிழ் வளர்ச்சி இயக்ககத்தால் ஆய்ந்து அறுதியிடப்பெற்ற அச்சக மதிப்பீட்டுத் தொகையில் 60% இவ்விரு தொகைகளில் எத்தொகை குறைவாக உள்ளதோ அத்தொகை மொத்த நிதியுதவிக்குரிய தொகையாகக் கணக்கிடப்பெற்று ஒப்பளிப்பு வழங்கப்பெறும்.

17 அச்சிடப்பெறும் நூலின் பதிப்புரிமை நூலாசிரியர்களுக்கு உரியதாகும்.

18 நிதியுதவி பெற்று வெளியிடக் கருதும் நூலின் பதிப்புரிமை (Copy right of the Book) பற்றிய முழுமையான விவரங்களை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும். வெளியிடப்பெறாத நூல்களைப் பொறுத்தவரை அவை குறிப்பிடப்பெற்ற நூலாசிரியர்களால் உள்ளபடியாக எழுதப்பெற்றன என்பதற்கான எழுத்து வடிவிலான சான்றினை அவர் அளித்தல் வேண்டும்.

19 தக்க காரணங்களின் பொருட்டு, நிதியுதவி பெற்றவர்களால் அளிக்கப்பெறும் குறிப்பினை எழுத்து வடிவிலான வேண்டுகோளின் அடிப்படையில், வல்லுநர் குழுத் தலைவரான தமிழ் வளர்ச்சி இயக்குநர் நூல் வெளியீடு தொடர்பாகப் பெரும அளவுக்கு இரு திங்கள் கால நீட்டிப்பு அளிக்கலாம். அவ்வாறு கால நீட்டிப்பு அளிக்கப்பெறும் நேர்வில் ஒரு திங்கள் அல்லது அதன் பகுதிக்கு 5% என்ற அளவில் வழங்கும் மொத்த நிதியுதவிக்குரிய தொகையில் பிடித்தம் மேற்கொள்ளப்படும். எஞ்சிய தொகையே வழங்கப்பெறும். அவ்வாறு கால நீட்டிப்பு அளித்து நூல் வெளியிடப்பெறவில்லை எனில், வழங்கப்பெற்ற தொகை 11% வட்டியுடன் மீளப் பெறப்படும்.

20 விண்ணப்பத்துடன் அனுப்பப்பெற்ற முதனிலை அச்சக மதிப்பீட்டில் குறிப்பிடப்பெற்ற அச்சகத்திலேயே நூலை அச்சிடுதல் வேண்டும். அச்சக மாற்றம் அமைந்தால் அதற்கான காரணத்தைத் தெரிவித்தல் வேண்டும்.

21 இத்திட்டத்தின்கீழ் நிதியுதவிவேண்டி விண்ணப்பம் செய்த ஒருவர் நிதியுதவி வேண்டுவதைக் கைவிட்டு தம்முடைய விண்ணப்பத்தை இடையில் திரும்பப் பெற்றுக்கொள்ள விரும்பினால் அவருடைய விண்ணப்பம் தொடர்பாக அரசுக்கு அமைந்த செலவினங்களை அவர் அரசுக்குச் செலுத்த வேண்டும்.

22 இத்திட்டம் தொடர்பாகப் பெறப்படும் விண்ணப்பங்களில் பொருத்தமுடைமை குறித்து முடிவு செய்வதற்கு வல்லுநர் குழு முழுமையான அதிகாரம் படைத்ததாகும்.

23 இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் எழக்கூடிய எவ்விதச் சிக்கல் குறித்தும் அரசால் மேற்கொள்ளப்படக்கூடிய முடிவே இறுதியானதாகும். அம்முடிவை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தோ, பிற வகையிலோ எதிர்க்கக் கூடாது.

*********

NAME -

BANK NAME -

A/C NUMBER –

MICR NUMBER -